# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**அதிவிசேஷமானது**

අංක 2027/13 - 2017 ජූලි මස 11 වැනි අඟහරුවාදා - 2017.07.11

***2027/13 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 11 ஆந் திகதி செவ்வாய்க் கிழமை***

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**மேல் மாகாண மாகாண சபை**

*1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பொழுதுபோக்கு வரிக் கட்டளைச் சட்டத்தின் 2(2) ஆம் பிரிவின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்*

*1984 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க பொழுதுபோக்கு வரி (திருத்தம்) சட்டத்தின் திருத்தப்பட்டுள்ள 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பொழுதுபோக்கு வரி கட்டளைச் சட்டத்தில் வெளியிடப்பட்டுள்ள பொழுதுபோக்கு அலுவல்களுக்காக அறவிடப்படும் உட்பிரவேசிக்கும் கட்டணத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய வரியின் வீதங்கள் கீழே அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் விதிக்கப்பட்டு 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்காக அறவிடுவதற்கு மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 286(அ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பொழுதுபோக்கு வரி கட்டளைச்சட்டத்தின் 2(1) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரின் 2016.08.16 ஆந் திகதியிடப்பட்ட இல. 124 ஐ கொண்ட தீர்மானத்தை மேல் மாகாணத்தின் கௌரவ முதலமைச்சர், நிதி மற்றும் திட்டமிடல், பொறியியல் சேவைகள், சட்டம் மற்றும் ஒழுங்கு, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம், பொருளாதார மேம்பாடு, மின்வலு மற்றும் சக்தி சுற்றாடல் விவகாரங்கள், நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத்துறை விவகாரங்கள் தொடர்பான அமைச்சருமான இசுர தேவப்பரிய ஆகிய நான் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பொழுதுபோக்கு வரி கட்டளைச் சட்டத்தின் 2(2) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய எனக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் அனுமதிக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கின்றேன்.*

இசுர தேவப்பிரிய,
மேல் மாகாண சபையின் முதலமைச்சர், நிதி மற்றும் திட்டமிடல்,
பொறியியல் சேவைகள் சட்டம் மற்றும் ஒழுங்கு, உள்ளூராட்சி மற்றும்
மாகாண நிர்வாகம், பொருளாதார மேம்பாடு, மின்வலு மற்றும் சக்தி
சுற்றாடல் விவகாரங்கள், நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு மற்றும்
சுற்றுலாத்துறை விவகாரங்கள் தொடர்பான அமைச்சர்.

ஸ்ரீமத் மார்க்கஸ் பர்னாந்து மாவத்தை,
சிராவஸ்தி மந்திரய,
கொழும்பு 07.
2017, யூன் 27.


1A - PG3602 - 13(2017/07)

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

| | வகுதி | பொழுதுபோக்குகளின் தன்மை | வீதம் |
|---|---|---|---|
| 01 | A | சினிமா திரையரங்கு | 10% |
| 02 | B | வெளிநாட்டு கலைஞர்களின் சகல கலைநிகழ்ச்சிகள் மற்றும் Carnival களியாட்டம் | 15% |
| 03 | C | வர்த்தக நோக்குடன் நடாத்தப்படுகின்ற உள்நாட்டு கலைஞர்கள் கலந்து கொள்ளும் சகல கலைநிகழ்ச்சிகள் | 12% |
| 04 | D | Dj கலைநிகழ்ச்சி, நாட்டிய நிகழ்ச்சி, Dinner, Dance, Sing Alone மற்றும் வேறு ஆடல் பாடல் அடங்கலான கலைநிகழ்ச்சி/சர்வதேச விளையாட்டுப் போட்டிகள் / நலன்புரிச் சங்கம், பழைய மாணவர் சங்கம் மற்றும் அவ்வாறான சங்கங்களின் அமைப்பினால் நடாத்தப்படுகின்ற கலைநிகழ்ச்சிகள். | 10% |
| 05 | E | செயல்பாட்டு நிலையிலுள்ள கலைஞர்களின் சங்கத்தின் தலைமையில் நடாத்தப்படுகின்ற கலைநிகழ்ச்சிகள், (வருடம் ஒன்றுக்கு உச்சளவு மூன்று கலை நிகழ்ச்சிகள்) /உள்நாட்டு விளையாட்டு போட்டி | 08% |
| 06 | F | தற்போதைய பிரசித்திபெற்ற கலைஞர் ஒருவரினால் தமது வாழ்க்கையில் முக்கிய சந்தர்ப்பமொன்றில் நடாத்தப்படுகின்ற கலைநிகழ்ச்சி (வாழ்நாளில் ஒரு கலைநிகழ்ச்சிக்காக மட்டும்) பாடசலை ஒன்றினால் பாடசாலை நலன்புரி விடயங்களுக்காக நடாத்தப்படுகின்ற விண்ணப்பதாரி அதிபராக இருக்கும் வலயக்கல்விப்பணிப்பாளரின் அனுமதியுடனான கலைநிகழ்ச்சி /பாடசாலை அல்லது பழைய மாணவர் சங்கம் அல்லது பாடசாலையின் சங்கமொன்று பாடசாலைக்காக நடாத்துகின்ற விளையாட்டுப்போட்டி. | 07% |

7 - 813

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.